Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் –IV

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஆவணி–17 | 02–09–2005 | வெள்ளிக்கிழமை | ஓசை –197



உங்கள் அலைத்துத் தேவைகளுக்கும்

R.V.பந்தல் சேவை

முல்லைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 (சி-12762) விநாயகர் வீதி, மயிலிட்டி.

## –கிளி.இல் அணிதிரண்ட மக்கள் வெள்ளம்–

# தமிழ் மக்களின் சுய நிர்ணயத்தை சர்வதேசம் அங்கீகரிக்க வேண்டும்

## எழுச்சி மாநாட்டில் வலியுறுத்து

**தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையை சர்வதேசம் அங்கீகரிக்க வேண்டுமெனக்கோரி வவுனியா தமிழ் தேசிய எழுச்சி மாநாட்டு பிரகடனத்தை வலியுறுத்தி நேற்று கிளிநொச்சியில் மாபெரும் தமிழ் தேசிய எழுச்சி மாநாடு பல்லாயிரக்கணக்கா ன மக்களின் பங்களிப்புடன் நடைபெற்றது.**

நேற்றுப்பிற்பகல் 4.00 மணிக்கு கிளிநொச்சி பொதுவிளையாட்டு மைதானத்தில் ஆரம்பமான இந்த மாநாட்டில் பொதுச்சுடரினை மாவீரர் மேஜர் விமலின் துணைவியாரான திருமதி. தமிழ்ச்செல்வி சண் முகநாதனும், மாவீரர் மேஜர் கமலின் தந்தையாரான அருணாசலமும் ஏற்றி வைக்க, தமிழீழத் தேசியக்கொடியினை மாவீரர் கப்டன் வண்ணனின் தந்தையாரான முத்துவேல் சீவரத்தினம் ஏற்றிவைத்தார். தொடர்ந்து எழுச்சிச்சுடர் ஏற்றலோடு பிரகடன நிகழ்வின் அரங்க நிகழ்வுகள் ஆரம்பமாகின. எழுச்சிப்பாடலுடன் அமைந்த கோசங்கள் எழுப்பப்பட்டதைத் தொடர்ந்து ஆசியுரைகளை

(IV.ஆம் பக்கம் பார்க்க)



கிளிநொச்சி தேசிய எழுச்சி மாநாட்டில் கலந்து கொண்ட மக்கள் திரளில் ஒருபகுதி.



தமிழீழத்தேசியத்தலைவருக்கான எழுச்சிப்பிரகடன பிரதியை அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையதலைவர்கணேசபிள்ளை சோ.தங்கன் அவர்களிடம் கையளித்தார். (சோ)

## கிளி.இல் பேச்சுவார்த்தை நடத்த சிறிலங்கா அரசாங்கம் மறுப்பு

(கொழும்பு)

போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீளாய்வு செய்வது குறித்த பேச்சுவார்த்தையை கிளிநொச்சியில் நடத்துவதை சிறிலங்கா அரசு மறுத்துள்ளது.

கொழும்பில் நேற்று வியாழக்கிழமை நடந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் அரச பேச்சாளர் நிமால் சிறிபாலடி சில்வா இதனைத் தெரிவித்துள்ளார்.

சமாதான முயற்சிகளில் நோர்வே அரசாங்கம் கடமையாற்றுவதை எதிர்க்கும் தீர்மானங்கள் எதுவும் அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்படவில்லை.

நோர்வே தனது அனுசரணையாளர் பணியை தொடர்ந்துமேற்கொள்ளும் என்றார். (IV ஆம்பக்கம்பார்க்க)

## வீர வணக்கம்

30-08-2005 அன்று ஆற்றில் மூழ்கி போராளி ஒருவர் சாவடைந்துள்ளார். லெப்டினன் கேணல் - முரளிதரன்/நிருஜன் சொந்தமுகவரி:- தர்மபாலன்-கஜரூபன் ,புளியங்குளம் றோட்நெடுங்கேணி. தற்போதைய முகவரி- கொழும்பு மாளிகாவத்தை என்றபோராளியே சாவடைந்தவராவார். இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## எமது நிலத்தையும் கடலையும் ஆக்கிரமித்துள்ள இராணுவம் உடனடியாக வெளியேற வேண்டும்

*–கிளி. தமிழ்தேசிய எழுச்சி பிரகடனம் வலியுறுத்து*

(கிளிநொச்சி)

எமதுதாயக நிலத்தையும் கடலையும் ஆக்கிரமித்துள்ள சிறிலங்கா இராணுவம் உடனடியாக வெளியேற வேண்டும். எமது சுதந்திர வாழ்வை நோக்கித் தமிழ் மக்கள் அணி திண்டபடியுள்ளோம் சர்வதேச சமூகம் எம்மையும் எமது இறைமைக்கான போராட்டத்தையும் அங்கீகரிக்க வேண்டுமென சர்வதேசத்தைத் கோரும் வவுனியா தமிழ் தேசிய எழுச்சி மாநாட்டில்பேராளர்களால் விடுக்கப்பட்டபிரகடனம் கிளிநொச்சி தமிழ் தேசிய எழுச்சிமாநாட்டிலும் மக்களினால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தமிழ்தேசிய எழுச்சிக்கான வவுனியா மாநாட்டு பிரகடனத்தை வலியுறுத்தும் எழுச்சிப்பிரகடனம் நேற்று கிளிநொச்சியில் வெளியிடப்பட்டது.வவுனியாபிரகடனத்தை போன்றே இப்பிரகடனத்திலும், எமது தாயக நிலத் தையும் கடலையும் ஆக்கிரமித்து நிற்கும் சிறிலங்காஇராணுவம் எமதுமண்ணை, கடலைவிட்டு உடனடியாக வெளியேறவேண்டும் என்றும் எமது நிலத்திலும், எமதுபலத்தில் எமது தலைவிதியைநாமே நிர்ணயித்துக் கொள்ளும் சூழ்நிலை உருவாகவேண்டும் என்றும்அந்த உன்னதமான உயரியசுதந்திர வாழ்வை

(IV ஆம்பக்கம் பார்க்க)

## மக்கள் எழுச்சியின் உச்ச வடிவமாகவே கிளிநொச்சி பிரகடனம் அமைந்துள்ளது

*–தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன்*

(கிளிநொச்சி)

விடுதலைப்புலிகள் தொடர்ந்து பொறுமை காப்பாதைத் தவிர்த்து விடுதலைப் போராட்டத்தைத்தொடர்ந்து தமது விடிவைப் பெற்றுத் தருமாறு எமக்கு மக்கள் கடினமாக வலியுறுத்தி வருகின்றனர். இதன் உச்ச வடிவமாகவே கிளிநொச்சிப் பிரகடனம் அமைகிறதென தமிழீழ அரசியல்துறைதுணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் தெரிவித்துள்ளார்.

நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்ற தமிழ் தேசிய எழுச்சி மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாம் கற்பனையிலும் கண்டிராத மக்கள் சமுத்திரம் இங்குஆர்ப்பரித்து நிற்பதை எண்ணி நாம் மிகவும் மகிழ்வு கொள்கின்றோம்.

இதன்மூலம் நாம் இந்த விடுதலைப் போராட்டத்தில் வீரச்சாவைத் தழுவிய எங்கள் மாவீரர்களினதும், பொது மக்களினதும்உயிர்களினதும், இன்னும் பல கணக்கில் இடப்படாத சொத்துக்களினதும், விலை கொடுப்பின் மூலம் எமது நிம்மதியான கௌரவமான வாழ்வுக்கான உத்தரவாதத்தைப் பெற்றுத்


(IV ஆம்பக்கம் பார்க்க)

# கிளி. தமிழ் தேசிய எழுச்சிப் பிரகடன மாநாட்டில்...








































# மக்கள் மீது மீண்டும் போர் தொடுக்கப்பட்டால்

# அனைவரும் புலிகளாகிப் போராடுவோம்

## - திருமலை மக்கள் பேரவைத் தலைவர் எச்சரிக்கை



தமிழ்பேசும் மக்கள் மீது மீண்டும் போர் திணிக்கப்பட்டால் சிறிலங்கா அரசுக்கெதிராக அத்தனை தமிழர்களும் தேசியத் தலைவரின் பின்னால் புலியாகிப் போராடுவோம்.

இவ்வாறு திருகோணமலை மாவட்ட மக்கள் பேரவைத் தலைவர் விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார். நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்ற தமிழீழ தேசிய எழுச்சி மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேலும் கூறுகையில்;

இந்தத் தேசிய மாநாட்டின் மூலம் சர்வதேசத்திற்கு நாங்கள் ஒரு செய்தியை சொல்ல வேண்டிய தேவை இருக்கின்றது. எந்தச் சூழ்நிலையிலும் சிறிலங்கா அரசாங்கம் தமிழ் மக்களுக்கு நியாயமான ஒரு தீர்வினைத் தருவதற்கு தயாராக இல்லை. மீண்டும் ஒரு தடவை தமிழ் மக்கள் மீது யுத்தத்தை திணிப்பதற்கு அவர்கள் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள்.

சிறிலங்கா அரசாங்கமும், இராணுவமும் எமது தேசியத் தலைவருடன் ஒரு நிபந்தனையற்ற ஒரு பேச்சு வார்த்தைக்கு உடன்பட்டார்களென்றால் அதற்குக் காரணம் அவர்கள் தமிழ் மக்கள் மீது கொண்ட காதல் அல்ல. 2001 ஆம் ஆண்டு. யூலை மாதம் 24 ஆம் திகதி கட்டுநாயக்கா விமானநிலையத்திலே பதின்நான்கு விடுதலைப்புலிகள் தீயோடு தீயாக, காற்றோடு காற்றாக சங்கமமாகி சிறிலங்கா தேசத்திற்குக் கொடுத்த அந்த அடிதான் காரணம். சிறிலங்காவின் பொருளாதாரம் சின்னா பின்னமாகி இராணுவ ரீதியாக தமிழீழ விடுதலைப்புலிகளைத் தோற்கடிக்க முடியாது என்ற நிலைப்பாட்டிற்கு வந்ததன் பின்னர் தான் அவர்கள் பேச்சுவார்த்தைக்கு வந்தார்கள்.

நாங்கள் ஒன்றை திடமாகச் சொல்லி வைக்க விரும்புகின்றோம்.

1983 ஆம் ஆண்டு தமிழ் மக்களினது பிணங்கள் வீதியிலே எரிந்து கொண்டிருந்த பொழுது தமிழ் மக்கள் அரைகுறையாகப் போட்டு எரிக்கப்பட்ட பொழுது அன்று சிறிலங்கா தேசத்தினது சனாதிபதியாக இருந்த ஜெயவர்த்தனா என்கின்ற வெறியன் தமிழீழ மக்களைப் பார்த்துச் சொன்னார் போர் என்றால் போர் சமாதானமென்றால் சமாதானம் என்று அதே சிறிலங்கா தேசத்தையும் சிறிலங்கா மக்களையும் பார்த்து நாங்கள் இன்று தமிழீழ தேசியத் தலைவரின் பின்னால் நிற்கின்ற மக்கள் சொல்கின்றோம் போர் என்றார் போர் சமாதானம் என்றால் சமாதானம், இந்த நாடு ஒன்றாக இருக்க வேண்டுமா இரண்டாக இருகக வேண்டுமா என்பதைத் தீர்மானிக்க வேண்டியவர்கள் சிறிலங்கா தேசத்து மக்களே தவிர தமிழ்பேசும் மக்கள் அல்ல என்பதை திட்டவட்டமாகச் சொல்லி வைக்க விரும்புகின்றோம். இந்த நாடு ஒன்றாக இருக்க வேண்டுமாக இருந்தால் உடனடியாக ஒரு தீமானத்திற்கு வாருங்கள். தமிழ் பேசும்மக்களின் பிரச்சினைக்கு பேச்சு வார்த்தை மூலம் உடனடியாக ஒரு தீர்வை கொடுக்கத் தயாராகுங்கள். சர்வதேசத்திற்கு சொல்லுகின்றோம் இதுவரை சமா தான காலத்தில் மட்டும் 96 இற்கு மேற்பட்ட போராளிகளை அநியாய மாக இழந்தோம். பல கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களை இழந் தோம்.

அரசியல் போராளிகளை இழந்தும் இன்றும் எமது தலைவர் மௌனம் காத்துக் கொண்டிருக்கின்றார் என்றால் அதற்கு அர்த்தமுண்டு என்பதை நினைத்துக் கொள்ளுங்கள். நாங்கள் சிறிலங்கா தேசத்திற்கும் சர்வதேசத்திற்கும் சொல்லுகின்றோம். தமிழீழ விடுதலைப்புலிகள் கொடுத்திருக்கின்ற இந்த சமாதான காலத்தைப் பயன்படுத்தி ஒரு நிலையான சமாதானத்தை உருவாக்கா... எங்கள் மீது போர் தொடுக்கப்பட்... தமிழ் பேசும் மக்கள் நாம் அத்தனை பேரும் புலிகளாக மாறி போரைச் சந்திக்கத் தயாராக இருக்கின்றோம் என்ற செய்தியை சர்வதேசத்திற்கு சொல்லுகின்றோம்.

தமிழீழத் தாயகத்தின் தலை நகரம் திருகோணமலையில் திட்டமிட்ட ரீதியில் தமிழ் பேசும் மக்களை அச்சுறுத்துவதற்காக இரவோடு இரவாக கொண்டு வந்து வைக்கப்பட்ட புத்தர்சிலை விவகாரத்தால் இன்று திருகோணமலை இராணுவ மயப்படுத்தப்பட்டிருக்கின்றது. வீட்டுக்கு வீடு சந்திக்குச் சந்தி மூலைக்கு மூலை ஆயிரக்கணக்கில் இராணுவம் குவிக்கப்பட்டிருக்கின்றது. இந்த இராணுவத்தை திருகோணமலை மண்ணிலிருந்து சிறிலங்கா அரசாங்கம் அகற்றத் தவறுமாக இருந்தால் திருகோணமலை மக்கள் ஒன்று சேர்ந்து கிளர்ந்தெழுந்து இராணுவத்தை இந்த மண்ணிலேயிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்போம் அந்த நேரத்தில் தமிழர் தாயகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் மக்கள் போராட்டம் வெடிக்க வேண்டும் ஒரே நேரத்தில் உரிமைக்குரல் ஒலிக்க வேண்டும் திருகோணமலை மண் காப்பாற்றப்பட வேண்டும் எனவே இந்த இடத்திலிருந்து கொண்டு சிறிலங்கா அரசாங்கத்திற்கு நாங்கள் சொல்லுகிறோம் திட்டமிட்ட அடிப்படையில் தமிழ் பேசும் மககளையும், தமிழ் மண்ணையும் அச்சுறுத்துகின்ற நோக்கில் சட்டவிரோதமாக கொண்டு வந்து நிறுத்தப்பட்ட புத்தர்சிலையையும், இராணுவத்தையும் அகற்ற வேண்டுமென்று இந்த தேசிய பிரகடனத்திலே கூறுகின்றோம். அவ்வாறு அகற்றத் தவறினால் தமிழ் பேசும் மக்கள் நாங்கள் அகற்றுவோம்.

இந்த மாநாட்டிலே சர்வதேசத்திற்கு இறுதியாகச் சொல்லுகின்றோம் உலகத்து நாடுகள் எல்லாம் பயங்கர வாதிகள் என்று சொல்லிக் கொண்டிருந்தவர்கள் இன்று தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பையும் அதன் தலைவரையும், ஒரு தேசிய விடுதலை அமைப்பாகவும் தேசியத் தலைவராகவும், ஏற்றுக்கொண்டிருக்கின்ற காரணத்தினால் தான் நாங்கள் சர்வதேசத்திற்கு மதிப்பளித்திருக்கின்றோம். எனவே சர்வதேசமே தமிழ் பேசும் மக்களின் போராட்டத்தினது நியாயத் தன்மையினை உணர்ந்து சிறிலங்கா தேசத்தை பேச்சுவார்த்தைக்கு வந்து அதன் மூலம் தீர்வு காண நிர்ப்பந்தியுங்கள்.

மீண்டும் எம்மீது யுத்தம் திணிக்கப்பட்டால் தமிழ் மக்கள் அனைவரும் எமது தலைவரின் பின்னால் புலிகளாகி யுத்தத்தின் மூலம் தமிழீழத்தை அடைந்தே தீருவோம் என்றார். (ச,கு,சோ,தீ)

# சிங்கள அரசுகள் தமிழ்பேசும் மக்களுக்கெதிராக

# செயற்பட்டதால் போராட்டம் உருவானது

## -யாழ்.இஸ்லாமிய மக்கள் பணிமனை செயலர் மௌலவி எஸ்.எம்.சகீல்



ஆண்டாண்டு காலமாக ஆண்டுவந்த பூமியையும் வீதிகளையெல்லாம் சிங்கள ஆக்கிரமிப்பாளர்கள் சுற்றிவளைத்தனர். சிங்கள அரசுகள் தமிழ்பேசும் மக்களுக்கு எதிராக செயற்பட்டன. எங்களுடைய உரிமைகளை நாங்கள் பெற்று வாழ்வதற்குக்கூட தடைவிதித்தனர். அந்த நிலைமையில் தான் இந்தப் போராட்டம் உருவாக்கப்பெற்றது.

யாழ்ப்பாண இஸ்லாமிய மக்கள் பணிமனை செயலாளர் மௌலவி எஸ்.எம். சகீல் நேற்றைய எழுச்சி மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்தார்.

இந்தப் போராட்டத்திலும் முஸ்லிம்கள் என்றும் சளைத்தவர்கள் அல்ல. தமிழர்களும், முஸ்லிம் மக்களும் ஒன்றிணைநதவர்களாகவே இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்ற வரலாறுகளையும் நாங்கள் பார்க்கின்றோம்.

எங்களுடைய தலையாய கடமை என்று புறப்பட்ட இந்தப் போராட்ட பயணத்திலே நாம் தமிழ்பேசும் மக்கள் என்றவகையில் கைகோர்தவர்களாக என்றும் செயற்படவேண்டும்.

தலைவர் பிரபாகரனின் பின்னணியிலே தங்களுடைய வரலாற்றை தமிழர்கள் முன்னெடுத்துச் செல்லுகின்றார்கள் இது பாராட்டப்படக் கூடிய விடையம்.

நாம் நியாயத்தைபேசுகின்றோம் உண்மையை இந்த உலகிற்கு, இந்த மண்ணுக்கு, சர்வதேசத்திற்கு நாங்கள் புலப்படுத்துகின்றோம். ஆனால் நாங்கள் ஓர் குடும்ப உறவைக் கொண்டவர்கள் தமிழ்மக்கள், முஸ்லிம் சமூகங்களும் ஒரு குடும்ப உறவைக் கொண்டவர்கள் எங்களுக்குள் பல பிரச்சினைகள் எழலாம் பல சிக்கல்கள் எழலாம் அதனை நாங்களே எங்களுடைய குடும்பமே பேசித்தீர்த்துக்கொள்ளமுடியும் இதற்குள் அன்னியவர்களின் ஊடுருவல் எங்களுக்குத் தேவையில்லை.

வவுனியா மாநாட்டில் எடுத்த முடிவுகளை நிறைவேற்ற தங்கத்தலைவன் பின்னால் அணிசேர தமிழர்கள் மற்றுமல்ல தமிழ்பேசும் மக்கள் அனைவரும் தயாராக இருக்கின்றார்கள் என அவர் தமது உரையில் மேலும் தெரிவித்தார்.

## பாதாள உலகத்தலைவர் சுட்டுக்கொலை

கொழும்பு புதுக்கடை நீதிமன்றத்திற்கருகே நேற்று வியாழக்கிழமை காலை துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடந்தது காலை 11.35 அளவில் நடந்த இந்த துப்பாக்கிச் சூட்டில் பாதாள உலகக் குழுத் தலைவரான மொகமட் ரிஸ்வான் உயிரிழநதுள்ளார்.

நேற்று வழக்கு விசாரணையொன்றுக்காக புதுக்கடை நீதிமன்றத்திற்கு வெலிக்கடை சிறையிலிருந்து பாதாள உலகக் குழுத் தலைவ ரான மொகமட் ரிஸ்வான் அழைத்து வரப்பட்டார். விசாரணை முடிவில் மீண்டும் சிறைச்சாலை பேருந்தில் அவர் ஏற்றப்படும்போது மற்றுமொரு பாதாள உலககுழுத்தலைவரான தனுன்க என்பவரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

# தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளல்-2005

தமிழீழ மீட்புநிதிக் கடன்மீளளிப்புக் கீழ்வரும் அட்டவணைக்கமைவாக உதவி அரசாங்க அதிபர் பிரிவுவாரியாக நடைபெறும். 2004 ஆம் ஆண்டுவரை மீளளிப்பதற்குத் தெரிவு செய்யபட்டோரில் இதுவரை மீளப்பெறாதோரும் ஏதாவதொரு மீளளிப்பு நிலையத்தில் மீளப்பெற்றுக் கொள்ளலாம் என தமிழீழ விடுதலைப்புலிகளின் நிதிப்பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## யாழ்.மாவட்டம்

இடம்:- முகமாலை நுழைவாயிலருகே அமைக்கப்பட்டுள்ள கூடம்
நேரம்:- காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 2.00 மணிவரை

நாள்
09.09.2005 (வெள்ளி)
10.09.2005 (சனி) } -நல்லூர்
11.09.2005 (ஞாயிறு) -யாழ்ப்பாணம்
12.09.2005 (திங்கள்) -கோப்பாய்
13.09.2005 (செவ்வாய்) -உடுவில்
14.09.2005 (புதன்) -மானிப்பாய்
16.09.2005 (வெள்ளி)-தெல்லிப்பளை
17.09.2005 (சனி)-சங்கானை
18.09.2005 (ஞாயிறு)-கரவெட்டி
19.09.2005 (திங்கள்)-பருத்தித்துறை வடமராட்சிகிழக்கு
20.09.2005(செவ்வாய்)-சாவகச்சேரி, பச்சிளைப்பள்ளி
21.09.2005 (புதன்) வேலணை காரைநகர்

## வன்னி மாவட்டம்

23.09.2005 (வெள்ளி)
மாங்குளம் மகாவித்தியாலயம்-மாங்குளம் காலை 8.00 மணி.
வருவாய்ப்பகுதிச் செயலகம்-புளியங்குளம் மு.ப.9.00 மணி.
அக்கராயன்மகாவித்தியாலயம் -அக்கராயன் பி.ப 1.30 மணி.
கிளி.மத்தியகல்லூரி -கிளிநொச்சி பி.ப 3.30 மணி.

24.09.2005 (சனி)
பூநகரி நல்லூர் மகாவித்தியாலயம்-பூநகரி காலை 8.30 மணி.
முழங்காவில்மகாவித்தியாலயம்-முழங்காவில் மு.ப.9.30 மணி.
விடத்தல்தீவுறோ.க.பாடசாலை-விடத்தல்தீவு மு.ப. 11.00 மணி.
கறுக்காய்க்குளம் அ.த.க பாடசாலை-கறுக்காய்க்குளம் பி.ப. 12.30 மணி.
வருவாய்ப்பகுதிச் செயலகம் -மல்லாவி பி.ப 5.30 மணி.

25.09.2005 (ஞாயிறு)
நெடுங்கேணி மகாவித்தியாலயம்-நெடுங்கேணி மு.ப.9.30 மணி.
ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்-ஒட்டுசுட்டான் மு.ப.10.30 மணி.
வித்தியானந்தாக் கல்லூரி -தண்ணீரூற்று ந.ப.12.00.மணி
ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம்-புதுக்குடியிருப்பு பி.ப.2.30 மணி.
விசுவமடு மகாவித்தியாலயம் -விசுவமடு பி.ப. 4.00 மணி.

# தேர்தலுக்கு முன் சமாதானப் பேச்சு நடத்த அறுபத்தேழு சதவீதமானோர் எதிர்ப்பு

சிறிலங்கா சனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்தக் கூடாது என்று 67 சதவீதத்தினர் தெரிவித்துள்ளனர்.

தொலைக்காட்சி நிறுவனமொன்று நேயர்களிடம் நடத்திய கருத்துக் கணிப்பில் இது தெரியவந்துள்ளது.

"லங்காதீப" பத்திரிகை மற்றும் மெசென்ஜர் நிறுவனத்தின் அனுசரணையுடன் தனியார் தொலைக் காட்சி நிறுவனமான சுவர்ணவாஹினி நடத்திய கருத்துக் கணிப்பில் தேர்தலுக்கு முன்னர் சமாதான மேசைக்குச் செல்ல வேண்டும் என்று 731 பேர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இது கருத்துத் தெரிவித்தவர்களில் 33 வீதமாகும்.

தேர்தலுக்கு முன்னர் அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தை மேசைக்குச் செல்லக்கூடாதென 1,499 பேர் கருத்துத் தெரிவித்துள்ளனர் இது 67 வதமாகும்.

அதற்கமைய பெரும்பாலானவர்களின் கருத்து தேர்தலுக்கு முன்னர் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படக் கூடாது என்பதாகும்.

2,641 பேர் தங்களின் கருத்துக்களைத் தெரிவித்திருந்தனர். அதில் 411 பேரின் கருத்துக்கள் நிராகரிக்கப்பட்டன. தொலைபேசியூடாக இந்தக் கருத்துக்கணிப்பு கடந்த செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்டது.

## புலிகள்-ஐ.சி. ஆர். சி. சம்பூரில் பேச்சு

(திருகோணமலை)

செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழுவின் (ஐ.சி.ஆர்.சி.) இலங்கைக்கான உதவி வதிவிடப்பிரதிநிதி ரொபர்ட் ஸெட் பெல்ஸ்கி நேற்று வியாழக்கிழமை காலை மூதூர் கிழக்கு -சம்பூரில் உள்ள விடுதலைப்புலிகள் அரசியல்துறைச் செயலகத்தில் விடுதலைப்புலிகளின் திருமலை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் செம்மணனைச் சந்திப்பேச்சுக்கள் நடத்தினார். தற்போதைய நிலவரங்கள் பற்றி பேச்சுவார்த்தையில் ஆராயப்பட்டதாக விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் துயருற்ற மக்களுக்கு ஆற்றும் சேவைகளை செம்மணன் பாராட்டினார். தொடர்ந்தும் விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பு வழங்கப்படும் என்றும் செம்மணன் கூறினார், விடுதலைப்புலிகள் தங்களின் நிவாரணப்பணிகளுக்குப்பூரண ஒத்துழைப்பை நல்கி வருவதாக கூறிய செஞ்சிலுவைச்சர்வதேச குழுவின் இலங்கைக்கான உதவி வதிவிடப் பிரதிநிதி ரொபர்ட் ஸெட் பெல்ஸ்கி அதற்கான பாராட்டையும் தெரிவித்தார். (25)

### எமது ...

நோக்கி தமிழ் மக்கள் அணிதிரண்டபடியே உள்ளோம் என் பதையும் இவவெழுச்சிப் பிரகடனத்தின் மூலம் முன்வைக்கும் அதேவேளை தமிழ்பேசும் மக்களாகிய எமது அடிப்படை வாழ்வுரிமையையும் சுதந்திர வாழ்வையும் ஏற்றுக்கொண்டு எமது மரபுவழி தாயகம், தேசிய இனம், தன்னாட்சி என்பனவற்றின் அடிப்படையில் எம்மையும் எமது இறமைக்கான போராட்டத்தையும் அங்கீகரிக்க வேண்டுமென்று சர்வதேச சமூகத்திடம் கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது.

### கிளி.....

சிறிலங்காவில் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு தமிழீழ விடுதலைப்புலிகள் மறுத்துள்ளனர்.

நோர்வேயின் தலைநகரான ஒஸ்லோவிலேயே பேச்சுவார்த்தைகள் நடத்தப்படவேண்டும் என்று விடுதலைப்புலிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

எனினும் வெளிநாட்டிலோ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலோ பேச்சுவார்த்தைகள் நடாத்துவதை அரசு நிராகரித்துவிட்டது.

அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அல்லது இரு சாராருக்கும் பொதுவான ஓமந்தையிலோ நடத்துவதற்கு அரசுத் தரப்பில் யோசனை தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

ஆனால் சிறிலங்கா அரசாங்கத்தின் யோசனையை விடுதலைப்புலிகள் நேற்று முன்தினம் புதன்கிழமை நிராகரித்தனர்.

பேச்சுவார்த்தைகள் சிறிலங்காவில் நடாத்தப்படாமல் வெளிநாட்டிலேயே நடத்தப்பட வேண்டுமென்று விடுதலைப்புலிகள் தொடர்ந்து கூறி வருகின்றனர்.

விடுதலைப்புலிகளின் இந்த யோசனையை சிறிலங்கா அரசாங்கம் மீண்டும் நிராகரிப்பதாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா அறிவித்தார்.

எனினும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சீன பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய பின்னரே இது குறித்து தீர்மானிக்க முடியும் என்றும் சில்வா கூறினார்.

### மக்கள் எழுச்சி...

தருமாறும் அன்றேல் அதை நாமே எமது பாதையில் தொடர்ந்து தமது அதியுயர் வலிமை மிகு எழுச்சி மூலம் அனைத்து தமிழீழ மக்களும் இங்கே அறை கூவி நிற்கின்றார்கள்.

இந்தக் கிளிநொச்சி மாவட்ட மக்களது எழுச்சி நிகழ்வு எமது வரலாற்றில் மிக முக்கியமான பதிவை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த மாதம் 27 ஆம் திகதி வவுனியா மாவட்டத்தில் தமிழினத்தின் அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகளும் ஒன்று கூடி செய்த தமிழ்தேசிய எழுச்சிப் பிரகடனம் எவ்வளவு பெரிய மக்கள் பின்னனியைக் கொண்டது என்பதனை இன்றைய இந்தமக்கள் எழுச்சி அனைவருக்கும் உணர்த்தியுள்ளது.

இவ்வாறு தான் தமிழ் மக்கள் அனைவருமே தேசிய ரீதியாக பரிபூரணமாக கிளர்ந்தெழுந்துள்ளார்கள்.

எமது விடுதலைபோராட்டப் பாதையை நாம் பின்நோக்கிப் பார்ப்போமானால் இவ்வாறான மக்கள் எழுச்சிகள் பெரிய தாக்கங்களை ஏற்படுத்தியிருப்பதை நாம் உணர முடியும். 1976 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை பிரகடனம் எமது போராட்டத்திற்கு பாரிய உந்து சக்தியாக அமைந்தது. அது போலவே 1987 ஆம் ஆண்டை நாங்கள்கொள்ள முடியும். ஏனெனில் அப்போதைய இந்திய அரசாங்கத்தால் அனுப்பப் பட்ட ஆக்கிரமிப்புப் படைகளின் பிடியில் எமது தேசிய விடுதலைப் போராட்டம் சிக்கித் தவித்த வேளை அதிலிருந்து விடுபட எமது அமைப்பும் அனைத்து தமிழீழ மக்களும், சாத்வீக ரீதியில் போராடினோம். ஆனால் இறுதியில் மக்களின் பரிபூர ணமான எழுச்சி தவிர்க்க முடியாத போருக்கு நிர்ப்பந்தித்தது. ஈற்றில் அதன் மூலம் அவ் ஆக்கிரமிப்பிற்கு முடிவும் கட்டப்பட்டது. இதுபோலவே 1999 ஆம் ஆண்டில் வன்னிப் பெரு நிலப்பரப்பு எங்கும் மக்கள் பேரெழுச்சி கொண்டு இராணுவப் பயிற்சியைப் பெற்றதன் மூலம் ஆக்கிரமிப்புப் படைகளை நாலா திசைகளிலிருந்தும், விரட்டி ஓட வைத்ததை அனைவரும் அறிவீர்கள்.

இதைப் போன்றதொரு காலகட்டத்தை இங்கு பார்க்கின்றோம். கடந்த மூன்றரை வருடங்களுக்கு மேலான சமாதான முயற்சிகள் மூலம் தமது வாழ்வில் ஏதாவது ஒரு பிரயோசனம் கிட்டும் என்ற நம்பிக்கை இன்று மக்களிடையே முற்றாக அற்றுப் போயுள்ளது.

அதனாலே தமக்கு ஆயுதப் பயிற்சியை வழங்கும் படியும், தொடர்ந்து பொறுமை காப்பதைத் தவிர்த்து சுதந்திரப் போராட்டத்தைத் தொடர்ந்து சென்று விடிவைப் பெற்றுத் தருமாறு எமக்கு எமது மக்கள் கடினமாக வலியுறுத்தி வருகின்றனர். இதன் உச்ச வடிவமாகவே தமிழீழ தேசிய எழுச்சிப் பிரகடனம் இந்த இடத்தில் நடைபெறுகின்றது.

இன்று இந்த இடத்தில் ஒலித்த மக்களின் அபிலாசைகளை அவர்களது விடுதலைப் படையினராகிய எமது விடுதலைப்புலிகள் அமைப்பும் பரிபூரணமாக உள்வாங்கிக் கொள்கின்றது. இது தொடர்பாக மக்களின் மத்தியில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பு நிலை தொடர்பாக மேலதிக விடயங்களை இன்று எமது தலைமைப்பீடம் உன்னிப்பாக கண்டுகொண்டுள்ளது.

இந்த வகையிலேயே எமது மண்ணின் விடிவிற்கு ஏற்ப எமது அமைப்பு தனது தீர்க்கமான முடிவுகளை மேற்கொள்ளும் என்பதை உறுதியாக உங்க ளிடத்தில் கூறி வைக்க விரும்புகின்றோம். உங்களுடைய உணர்வுகளும், உங்களுடைய எழுச்சிகளும் இந்தத் தேசத்தின் விடுதலையை விரைவாக வென்றெடுக்கும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு என அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் தனது சிறப்புரையில் மேலும் தெரிவித்தார்.

# ஊடகவியலாளர் மீதான தாக்குதலை கண்டித்து யாழ். இல் ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் ஊடகவியலாளர்கள் மீதும், ஊடகங்கள் மீதும் அதிகரித்து வரும் வன்முறைகளைக் கண்டித்து யாழ். மாவட்ட ஊடகவியலாளர்கள் ஆர்ப்பாட்டப் போராட்டமொன்றை நேற்று நடாத்தியுள்ளனர்.

யாழ். மத்திய பேருந்து நிலையம் முன்பாக காலை 10.30 முதல் ஒரு மணி நேரம் இவ் ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது.

தமிழ் ஊடகங்களையும், ஊடகவியலாளர்களையும் காக்கத் தவறிய அரசிற்கு எதிராகவும், இனவாத நோக்கில் ஊடகவியலாளர்களைத் தாக்கிவரும் ஜே.வி.பி கட்சிக்கெதிராகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோசங்களை எழுப்பினர்.

பொதுப் போக்குவரத்திற்கு எந்தவொரு இடையூறுமில்லாத வகையில் இடம்பெற்ற இவ் எதிர்ப்புப் போராட்டத்தில் குடாநாட்டிலிருந்து வெளி வரும் உதயன், யாழ். தினக்குரல், நமது ஈழநாடு, வலம்புரி மற்றும் ஈழநாதம் நாளிதழ்களது ஊடகவியலாளர்களும், வட இலங்கை பத்திரிகையாளர் சங்க அங்கத்தவர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

குறிப்பாக சுடரொளி பத்திரிகையின் கொழும்பு அலுவலகம் மீதான தாக்குதல், ஊடகவியலாளர்கள் கைது, முடக்கி வைக்கப்பட்டுள்ள விமலராஜன், நடேசன், சிவராம், படுகொலை வழக்கு விசாரணைகள் என்பவை தொடர்பிலேயும் இவ் எதிப்பு போராட்டம் இடம் பெற்றிருந்தது.

எனினும் படையினரும் பொலிசாரும் அப்பகுதியில் குவிக்கப் பட்டிருந்த போதும் அசம்பாவிதமேதும் இடம்பெற வில்லை.

இதே வேளை இலங்கை அரசு திட்டமிட்டே தமிழ் ஊடகவியலாளர்களை பழிவாங்கி வருவதாக வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத் தலைவர் சி. கதிர்காமத் தம்பி கண்டனம் வெளியிட்டார். (27

# சிங்கள பௌத்த குரலுக்கு இரு வேட்பாளரும் செவிசாய்க்க முன்வந்திருப்பது பெரிய வெற்றியே

-ஜாதிகஹெல உறுமய தெரிவிப்பு

சனாதிபதித் தேர்தல் விவகாரம் சூடுபிடிக்கும் இவ்வேளையில் வரலாற்றில் என்றுமே இல்லாதவாறு முதன்மை வேட்பாளர்கள் இருவரும், சிங்கள பௌத்த குரலுக்கு செவிசாய்க்க முன்வருவது சிங்கள பௌத்தமக்களுக்கு கிடைத்த மிகப் பெரிய வெற்றி என ஜாதிக ஹெல உறுமயவின் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

மேலும் கடந்த காலங்களில் தேர்தல்களின் போது முதன்மைக் கட்சிகள், சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவினைப் பெறுவதிலேயே அதிக அக்கறை காட்டி வந்தன, இம்முறை ஹெல உறுமய கட்சி இந்நிலையினை மாற்றியுள்ளது எனவும் கூறியுள்ளார்.

## உரித்துடையோர் பெற்றுக்கொள்க

மாங்குளம் காவல் பணிமனைப் பொறுப்பாளரினால் கண்டெடுக்கப்பட்ட இரண்டு பொதிகள் உடுப்புட னும், சில பொருட்களுடனும் மல்லாவி நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டுள்ளது.எனவே பொருட்களுக்கு உரிமை உடையவர்கள் தகுந்த ஆதாரங்காட்டி பெற்றுக்கொள்ளுமாறு மன்று கேட்டுக் கொள்கின்றது.

# யுத்த சூனியப் பிரதேசத்தில் வாக்களிப்பு நிலையங்கள்

*–நிமால் சிறிபால டி சில்வா தெரிவிப்பு*

வடக்குக் கிழக்கில் விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பிரதேச மக்கள் வாக்களிப்பதற்கு இதற்கு முன்னரான தேர்தல்களைப் போன்று யுத்த சூனியப் பிரதேசங்களில் வாக்களிப்பு நிலையங்களை அமைக்க சிறிலங்கா தேர்தல் திணைக்களம் முடிவு செய்துள்ளது.

கடந்த தேர்தலின்போது வடக்கு கிழக்கிற்கென பெருமளவு போக்குவரத்து செலவுகளை தேர்தல் திணைக்களம் ஏற்க வேண்டி யிருந்தது. இது தொடர்பாகவும் தேர்தல் திணைக்களம் விவாதித்து வருகிறது.

கடந்த தேர்தலின்போது குறிப்பாக முல்லைத்தீவு மாவட்ட போக்குவரத்திற்கு மட்டும் ஐந்து இலட்சம் ரூபா செலவாகியுள்ளதென தேர்தல் ஆணையாளர் தெரிவித்திருக் கிறார். அத்துடன் 2006 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்கு தயாராகுமாறும் தேர்தல் ஆணையாளர் அறிவுறுத்தியுள்ளார். தேர்தல் தொடர்பில் அடுத்த வாரமும் தேர்தல் ஆணையாளர் மீண்டும் உதவித் தேர்தல் ஆணையாளர்களையும் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகர்களையும் சந்திக்கவுள்ளார்.

### தமிழ்...

வட்டக்கச்சி ஆலய கெங்கா சிவகுருக்கள், கிளி.முல்லை மறைகோட்ட குருமுதல்வர் வேனாட் அடிகளாரால் யாழ். ஆயரின் ஆசிச் செய்தி, யாழ்.முஸ்லிம் மக்கள் பணிமனைச் செயலர், எஸ்.என். சகீல்மௌலவி, கிளி. மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் ஆகியோர் வழங்கினர்.

அடுத்து கருத்துரைகளை திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் வ.விக்கினேஸ்வரன், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி, வன்னி.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ.செல்வம் அடைக்கலநாதன், வடக்கு கிழக்கு மாகாண மனித உரிமைகள் செயலகப் பணிப்பாளர் கருணாரட்ணம் அடிகள் வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரட்ணம், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி. சிவனேசன், திருமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா சம்பந்தன், கிளி.வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி வி. மதுரநாயகம், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செ.ஜெயானந்தமூர்த்தி, அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் க.பத்மநாதன், தமிழீழ அரசியல் துறைத் துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து கிளி. மாவட்ட தமிழ்தேசிய எழுச்சி செயலணிச் செயலாளர் அ.வேளமாலிகிதனால் எழுச்சிப் பிரகடனம் வாசிக்கப்பட்டது.

தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையங்களின் தலைவர் கணேசபிள்ளை அவர்களால் தமிழீழ தேசியத்தலை வருக்கான எழுச்சிப் பிரகடனப் பிரதி அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளரிடம் கையளிக்கப் பட்டது.

கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் நன்றியுரை நிகழ்த்தியதையடுத்து நிகழ்வு நிறைவு பெற்றது.

இந் நிகழ்வில் முஸ்லிம் பிரதிநிதிகள், தமிழ் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள், அரச திணைக்கள அதிகாரிகள், அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், பொது மக்கள் எனப் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு தமது உணர்வுகளை வெளிப்படுத்தினர்

(சோ,ச,கு,தீ)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.